## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கா போட்ஸ் மனேஜ்மென்ட் அன்ட் கென்சல்ரன்ஸி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 90,420,529 ஆக காணப்பட்ட போதிலும் அத் தினத்தில் உள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகாரசபையால் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 42,758,471 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க உரிய மீதிகளிற்கிடையிலான ரூபா 47,662,058 தொகையான வேறுபாடு இனங்காணப்பட்டு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சேவையை வழங்குகின்ற பிரிவிற்கு நாங்கள் விலைச்சிட்டைகளை அனுப்புகின்றோம். அவை குறித்த பிரிவால் கொடுப்பனவிற்காக அதிகாரசபையின் நிதிப் பிரிவிற்கு அனுப்பப்படலாம். காத்திருக்கும் காலப்பகுதியை கடந்த விலைச்சிட்டைகள் அதிகாரசபையால் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லையா எனும் விடயம் தொடர்பாக நாங்கள் அறிந்திருக்கவில்லை. | அதிகாரசபையிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதி தொடர்பாக உரிய காலத்தில் மீதி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்காக ஆவணச்சான்று சமர்ப்பிக்கப்படாமை

| விபரம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | 8,865,577 | 2016 யூலை 01 தொடக்கம் 2018 ஏப்ரல் 30 வரை கம்பனியின் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 8,865,577 தொகையான 49 கொடுப்பனவுகளிற் குரிய கொடுப்பனவு | இது தொடர்பாக முறையான புலனாய்வொன்றை நாங்கள் மேற்கொண்டிருந்தோம். அங்கே வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளின் பிரகாரம் இங்கே குறிப்பிடப்பட்ட உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு மோசடி செய்வதற்கான சாத்தியம் | முகாமைத்துவத்தால் கொடுப்பனவுகளிற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உறுதிச்சீட்டுக்கள் மற்றும் ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் என்பன 2020 திசெம்பர் 31 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | காணப்படவில்லை என்பது எமது முடிவாகும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் இல. 2 இன் 36 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் காலி முகத்திடலிலுள்ள கடைகள் உள்ளடங்கலாக வணிகர்களிடமிருந்து பெற வேண்டிய வாடகை வருமானம் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் விடயத்தில் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் ரூபா 5,301,077 தொகையான ஆண்டிற்கான பெறவேண்டிய வருமானம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை துறைமுக அதிகாரசபையால் காலி முகத்திடல் வளாகங்களின் நிர்வாகத்திற்காக உடன்படிக்கையொன்றின் ஊடாக அவை எங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. கடைகள் உள்ளடங்கலாக பல ஏனைய சிறியளவிலான நாளாந்த நடமாடும் வணிகர்கள் இங்கே வணிகத்தில் ஈடுபடுகின்றனர். இவ் வணிகர்கள் மிகவும் நீண்ட காலத்தில் காலி முகத்திடலிலுள்ள அக் கடைகளில் பாரம்பரிய வணிகங்களில் ஈடுபடுகின்ற தனிநபர்களாவர் (ஏறத்தாழ 30–50 ஆண்டுகள்). துறைமுக அதிகாரசபையிடமிருந்து வளாகங்களின் நிர்வாகத்தை நாங்கள் கையேற்ற போது அவ் வணிகர்களும் கடைகளும் அப்போதும் அங்கே காணப்பட்டன. ஆகையால் அவ் வணிகர்களுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடைமுறையில் மிகவும் சிக்கல் காணப்படுகின்றது. | அட்டுறு அடிப்படையில் வருமானத்தை இனங்காண்பதற்கும் வியாபாரிகளுடன் முறையான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கை | | | |
| (i) 5.1.1 ஆம் பிரிவு | கம்பனியானது அதன் நீண்டகால இலக்குகளை குறிப்பிட்டு கூட்டிணைந்த திட்டமொன்றை 2020 மே 28 வரையிலும் தயாரித்திருக்கவில்லை. | இது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நீண்டகால இலக்குகளுடன் கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 7.4.1 ஆம் பிரிவு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று கம்பனியில் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்விற்குப் பொருத்தமான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அல்லது நிறுவனமொன்றை நியமிப்பது தொடர்பாக பணிப்பாளர் சபை கவனம் செலுத்துகின்றது. அதற்கிணங்க இவ் ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை அமுல்ப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) 7.4.5 ஆம் பிரிவு | ரூபா 7,760,496 கிரயத்துடனான கம்பனியின் நிலையான சொத்துக்களை சரிபார்ப்பதற்கு வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | பொருள் மெய்மையாய்வுகளை வருடாந்தம் மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) 9.2 ஆம் பிரிவு | பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) 9.3.1 ஆம் பிரிவு | கம்பனியின் பதவியணியினருக்கான முறையான ஆட்சேர்ப்பு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஒருமைப்பாடு என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களிற்கான உரிமை அதிகாரச்சட்டத்தின் 7(1), 8(2) மற்றும் 23 ஆம் பிரிவுகள் | இப் பிரிவுகளால் தேவைப்படுத்தப்பட்டவாறு, முறையான மாதிரியொன்றில் தகவல் ஏடுகளை பாதுகாத்து பேணுதல், நிறுவனம் தொடர்பான விபரமான அறிக்கையொன்றை அரையாண்டு ரீதியாக வெளியிடுதல் மற்றும் தகவல் உத்தியோகத்தரொருவரை நியமித்தல் போன்ற தேவைப்பாடுகள் முறையே அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட எங்களது கம்பனி 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களிற்கான உரிமை அதிகாரச்சட்டத்தில் வரையறுக்கப்பட்ட பொதுவான அதிகாரத்தை வழங்க வேண்டுமா என்பது தொடர்பாக சட்டரீதியான அறிவுரையை பெற்ற பின்னர் உரிய தேவைப்பாடுகளுடன் | தகவல்களிற்கான உரிமை அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2016 ஒக்தோபர் 25 ஆம் திகதிய பிஈடி 1/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு | சுற்றறிக்கை எல்லைகளிற்கு முரணாக போக்குவரத்துப் படியாக மீளாய்வாண்டின் போது கம்பனியின் இரண்டு உத்தியோகத்தர்களிற்கு ரூபா 469,555 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு தலைவர் மற்றும் முகாமைப் பணிப்பாளர் ஆகியோரிற்கு இப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன . எனினும் 2020 சனவரியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தலைவர் மற்றும் முகாமைப் பணிப்பாளர் ஆகியோரிற்கு செலுத்தப்படுகின்ற அனைத்துப் படிகளும் சுற்றறிக்கையுடன் இணங்கியிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ /17 ஆம் இலக்க கடிதம் | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் "2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிநிரல்" இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுடன் அதற்கிணங்க நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை எவ்வாறு அடைந்து கொள்வது, இலக்குகளை அளவிடுவதற்கான சுட்டிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடியவாறு அவற்றை அளவிடுவதற்கான சுட்டிகள் என்பவற்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 6,578,695 இலாபமொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 10,762,687 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 4,183,992 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நேரடி செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காலி முகத்திடல் பசுமையை நிர்வகித்து, பராமரித்து, முகாமை செய்வதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கம்பனியால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை 2019 பெப்ரவரி 09 இல் காலாவதியாகியிருந்த போதிலும் 2020 மே 31 வரை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் இது தொடர்பாக பல தடவைகள் அதிகாரசபைக்கு அறிவித்திருந்த போதிலும் உடன்படிக்கை தொடர்பில் இதுவரை முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் இவ் இடம் கொழும்பு நகரத்தில் பிரதான பொது தளமாக உள்ளதால் நாங்கள் துறைமுக அதிகாரசபையின் துணைக்கம்பனியொன்றாக அதன் பராமரிப்பிலிருந்து ஒருதலைப்பட்சமாக மீளப்பெற முடியாதுள்ளது. | உரிய தரப்பினருடன் ஆலோசிப்பதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாதாந்த தவணைக்கட்டணங்கள் கொடுப்பனவு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 332,174 தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவம் உரிய காலத்தில் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் எதிர்காலத்தில் தண்டப்பணக் கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) 2018 ஆம் ஆண்டின் போது இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு | எங்களிற்கு ஊடாக துறைமுக அதிகாரசபையில் வேலைக்கமர்த்தப்பட்ட | தாமதமின்றி கம்பனிக்கு கிடைக்க வேண்டிய தொகைகளை அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியால் வழங்கப்பட்ட மனித வளங்களிற்கான சம்பளங்களாக ரூபா 4,120,808 தொகை பெறப்பட வேண்டிய போதிலும் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேடுகளிலுள்ள முறையற்ற தன்மைகள், சம்பளக் கணிப்பீடுகளிலுள்ள தவறுகள், நியமனக் கடிதங்களிலுள்ள குறைபாடுகள் போன்ற காரணங்களினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அத் தொகை அறவிடப்படாதிருந்தது. | ஊழியர்களிற்கு இச் சம்பளங்கள் செலுத்தப்படுகின்றன. ஊழியர்களின் வரவு அறிக்கைகள், மேலதிகக் கொடுப்பனவு கணிப்பீடுகள் போன்றன அவ் ஊழியர்கள் வேலையில் ஈடுபட்டுள்ள அதிகாரசபையின் திணைக்களத் தலைவர் ஊடாக எமக்கு அனுப்பப்படுகின்றன. ஆகையால் இத் தொகையை அறவீடு செய்வதற்கு ஒவ்வொன்றாக அவ் அனைத்து பிரிவுகளுடனும் ஆலோசிப்பதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு அறிக்கைகள் ஊடாக காலி முகத்திடல் பகுதியில் செயற்படுகின்ற வியாபாரிகளிமிருந்து வருமானத்தை சேகரிப்பதை முறைமைப்படுத்துவதற்கான தேவையை கம்பனி அறிந்திருந்த போதிலும் வியாபாரிகளுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுதல் போன்ற முறையான நடைமுறைகள் 2020 மே 31 வரை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | துறைமுக அதிகாரசபையிடமிருந்து வளாகங்களின் நிர்வாகத்தை நாங்கள் கையேற்ற போது அவ் வணிகர்களும் கடைகளும் அப்போதும் அங்கே காணப்பட்டன. ஆகையால் அவ் வணிகர்களுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடைமுறையில் மிகவும் சிக்கல் காணப்படுகின்றது. | வளாகங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகளுடன் முறையான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |